**பெருநகர சென்னை மாநகராட்சி**

**செய்தி வெளியீடு**

**செ.வெ. எண். 107** **நாள்: 30.07.2018**

## பெருநகர சென்னை மாநகராட்சியில் காசநோய் கண்டறியும் நடமாடும் பரிசோதனைக் கூட வாகனம் மூலம் நடைபெறும் சிறப்பு சிகிச்சை முகாமை பொதுமக்கள் பயன்படுத்தி பயனடையுமாறு பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் முனைவர் தா.கார்த்திகேயன், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

பெருநகர சென்னை மாநகராட்சி, பொது சுகாதாரத்துறை சார்பாக காசநோய் இல்லாத சென்னையை உருவாக்க, பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் முனைவர் தா.கார்த்திகேயன், இ.ஆ.ப., அவர்களின் அறிவுறுத்தலின்படி பல்வேறு விழிப்புணர்வு மற்றும் சிகிச்சை முகாம்கள் சென்னை மாநகர் முழுவதும் தொடர்ந்து நடத்தப்பட்டு வருகின்றன.

மத்திய அரசின், தேசிய சுகாதார திட்டத்தின் கீழ் காசநோய் இல்லாத இந்தியாவை உருவாக்க வேண்டும் என்ற நோக்கத்தில், உலக காசநோய் தினமான 24.03.2018 அன்று, சென்னையில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால், காசநோய் கண்டறிவதற்கான அதிநவீன வசதிகளுடன் கூடிய நடமாடும் காசநோய் பரிசோதனை வாகனம் மூலம், சிகிச்சை அளிக்கும் திட்டமானது துவக்கி வைக்கப்பட்டது. இவ்வாகனமானது தமிழ்நாட்டில் உள்ள ஒவ்வொரு மாவட்டமாக சென்று பொதுமக்களுக்கு பயனளித்து வருகிறது.

இதன் தொடர்ச்சியாக, இன்று (30.07.2018) பெருநகர சென்னை மாநகராட்சியில் உள்ள திருவொற்றியூர் மண்டலத்திற்குட்பட்ட எண்ணூர் தாழங்குப்பத்தில், காசநோய் கண்டறியும் நடமாடும் பரிசோதனைக் கூட வாகனம் மூலம் காலை 10 மணி முதல் மதியம் 1 மணி வரை நிறுத்தி வைக்கப்பட்டு, காசநோய் களப்பணியாளர்கள் மூலம் அப்பகுதியில் உள்ள வீடுகளுக்கு சென்று பரிசோதனை செய்ததில் தொடர்ச்சியாக இரண்டு வார இருமல் மற்றும் மாலை நேர காய்ச்சல், சளியுடன் கூடிய இரத்தம் வருதல், பசியின்மை, உடல் எடைகுறைவு போன்ற காசநோய் அறிகுறிகள் உள்ள 106 நபர்கள் கண்டறியப்பட்டு அவர்களிடமிருந்து சளிமாதிரி சேகரிக்கப்பட்டது. நடமாடும் பரிசோதனைக்கூட வாகனத்தில் பொருத்தப்பட்டுள்ள, புதிய தொழில்நுட்பத்தைக் கொண்ட CBNAAT மரபணுக்கருவி மூலம் சளி மாதிரி பரிசோதனை செய்யப்பட்டு, காசநோய் இருப்பது கண்டறியப்பட்டால், உரிய சிகிச்சை தொடர்ந்து அளிக்கப்படும். மேலும், அப்பகுதி முழுவதும் விழிப்புணர்வு துண்டுப் பிரசுரங்கள், ஒலிபெருக்கி மூலம் காசநோய் குறித்து விழிப்புணர்வு பணிகள் மேற்கொள்ளப்பட்டது.

இந்நிகழ்ச்சியில், மாநகர நல அலுவலர் மரு.என்.ஏ.செந்தில்நாதன், கூடுதல் நல அலுவலர் மரு.ஜி.ராஜ்குமார், சுகாதார கல்வி அலுவலர் முனைவர் டி.ஜி.சீனிவாசன், காசநோய் திட்ட அலுவலர் மரு.J.லாவண்யா மற்றும் மாநகராட்சி அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

இந்நடமாடும் பரிசோதனைக் கூட வாகனம் மூலம் பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட கீழ்க்கண்ட மண்டலங்கள் மற்றும் தேதிகளில் பரிசோதனை மேற்கொள்ளப்படும்.

| தேதி | மண்டலங்கள் | இடங்கள் |
|---|---|---|
| 31.07.2018 | தண்டையார்பேட்டை | சத்தியமூர்த்தி நகர் |
| 01.08.2018 | இராயபுரம் | நாவலர் நெடுஞ்செழியன் நகர் |
| 02.08.2018 | இராயபுரம் | போஜராஜன் நகர், ஆசிர்வாதபுரம், பேசின்பிரிட்ஜ் |
| 03.08.2018 | தேனாம்பேட்டை | சண்முகபிள்ளை தெரு, ருத்தரபுரம், நொச்சிகுப்பம் |
| 04.08.2018 | தேனாம்பேட்டை | சுதந்திர நகர், அம்பேத்கர் நகர் |
| 06.08.2018 | அடையாறு | சீனிவாசபுரம், பட்டினப்பாக்கம் |
| 07.08.2018 | அடையாறு | ஓடைமான் நகர், திடீர் நகர், பெசன்ட் நகர் |
| 08.08.2018 | அடையாறு | ஆர்.பிளாக், கோட்டூர்புரம் |
| 09.08.2018 | பெருங்குடி | கள்ளுக்குட்டை, பெருங்குடி |
| 10.08.2018 | சோழிங்கநல்லூர் | செம்மஞ்சேரி |
| 11.08.2018 | சோழிங்கநல்லூர் | கண்ணகி நகர் |

எனவே, இந்த அரிய வாய்ப்பினை பொதுமக்கள் பயன்படுத்தி காசநோய் இல்லாத சென்னையை உருவாக்க ஒத்துழைக்குமாறு பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் முனைவர் தா. கார்த்திகேயன், இ.ஆ.ப., அவர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

**செய்தி வெளியீடு: இணை இயக்குநர்/மக்கள் தொடர்பு அலுவலர்,**

**பெருநகர சென்னை மாநகராட்சி**